

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (22.11.2024) கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில், சென்னை பெருநகர அலகின் சாலை மற்றும் பாலங்கள் கட்டுமான பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வு கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் ஆர்.செல்வதுரை, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) ஆர்.சந்திரசேகர், சென்னை பெருநகரஅலகின் தலைமைப் பொறியாளர் எஸ்.ஜவஹர் முத்துராஜ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் எம்.சரவணன், சென்னை பெருநகர அலகின் கண்காணிப்புப் பொறியாளர் பாஸ்கர், சென்னை பெருநகர அலகின் கோட்டப் பொறியாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், மின்சார வாரிய பொறியாளர்கள், சென்னை குடிநீர் வாரிய அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை - கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடைபெற்றது!

# பெருநகர அலகின் சாலை - பாலப் பணிகள்!

## பொதுப்பணிகள் – நெடுஞ்சாலைகள் – சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, நவ. 24-

கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் பெருநகர அலகின் சாலை மற்றும் பாலப் பணிகள் குறித்து பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

அதன் விபரம் வருமாறு:-

சென்னை பெருநகர அலகின் மூலம் ரூ.50க்கு கோடிக்கு மேல் நடைபெற்று வரும் சாலை மற்றும் பாலப் பணிகள் குறித்து தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் கோட்டப் பொறியாளர்களிடம் பணிகளின் முன்னேற்றம் குறித்து நேற்று முன்தினம் (22.11.2024) சென்னை - கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாநகராட்சி மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற் கும், சாலை மேம்பாலங்கள், கீழ்ப்பாலங்கள்,

கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாயினை கடப்பதற்குத் தேவையான பாலங்கள், இரயில்வே கடவு பாலங்கள் தேவைப்படுகின்றன.

இவற்றின் சில பணிகள் நெடுஞ்சாலைத்துறை சென்னை பெருநகர அலகினால் செயலாக்கப்பட்டு வருகின்றன. ரூபாய் ஐம்பது கோடிகளுக்கு மேல் உள்ள 16 பணிகளின் மொத்த மதிப்பு ரூ.2375 கோடிகளுக்கும் இவற்றில் 11 பணிகள் நில எடுப்பு பணிகளாகும். நில எடுப்பு பணிகள் அனைத்தும் துவங்கப் பெற்று பல்வேறு நிலைகளில் உள்ளன.

நில எடுப்புப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டால் பல்வேறு திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு வந்து சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் என்பதை குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள் வருவாய்த்துறை மற்றும் நில எடுப்பு அலுவலர்கள் உதவியுடன் இப்பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இது தவிர பெருங்களத்தூர் இரயில்வே பாலப் பணியில் உள்ள மீதமுள்ள பணிகள் வனத்துறை, மின்சார வாரியம் அனுமதிகளைப் பெற்று துவங்க வேண்டும் என்றும் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலைப் பணிகள் அனைத்தையும் 2025 மார்ச் இறுதிக்குள்ளும் கிழக்குக் கடற்கரை சாலை அகலப்படுத்தும் பணியினையும் 2025 மார்ச் மாதத்திற்குள்ளும் மத்திய கைலாஷ் சந்திப்பில் உள்ள பல்வழிச் சாலை மேம்பாலத்தினை 2025 மே மாதத்திலும், பாடி அருகே உள்ள இரயில்வே மேம்பாலத்தை 2025 டிசம்பர் இறுதிக்குள்ளும், குரோம் பேட்டை ராதா நகர் சுரங்கப் பாலம் இன்னும் நிறைவு பெறவில்லை. இப்பணியை டிசம்பர் 2024 முடிக்க வேண்டும் என்றும், வேப்பம்பட்டு மற்றும் விக்கோ நகர் இரயில்வே மேம்பாலப் பணி, மடிப்பாக்கம் சுரங்கப் பாலம், கொட்டிவாக்கம் கிரா மத்தில் சாலையை அகலப்படுத்தும் பணி போன்ற அனைத்துப் பணிகளையும் ஒவ் வொன்றாக ஆய்வு செய்து பொறியாளர்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் விரைந்து முடிக்க நிர்ண யிக்கப்பட்டு உள்ள காலக் கெடுவிற்குள் அனைத்து பணிகளையும் தரமுடன் செயலாக்கிட வேண்டும் என்று அமைச்சர் உத்திரவிட்டார்.

நேற்றைய ஆய்வுக் கூட்டத்தில் ஒப்பந்ததாரர்கள் சிலரையும் பங்கேற்க செய்து அவர்களுடைய கருத்தினையும் கேட்டறிந்து, சாலைப் பணிகளை விரைவாக முடிக்க அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் பணிகளில் ஏற்படும் இடர்பாடுகளை களைந்து பணிகளை ஒப்பந்த காலத்திற்குள் தரமாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டு வருவதற்கு, பிற சேவை துறைகளான வருவாய்த் துறை, மின்சாரத் துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறையின் பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் அனைவருக்கும் உரிய காலத்திற்குள் சாலை மற்றும் பாலப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் உரிய அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் மருத்துவர். ஆர்.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறையின் முதன்மை இயக்குநர் ஆர். செல்வதுரை, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) ஆர். சந்திரசேகர், சென்னை பெருநகர அலகின் தலைமைப் பொறியாளர், எஸ். ஜவஹர் முத்துராஜ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலை யத்தின், இயக்குநர், எம்.சரவணன், சென்னைப் பெருநகர அலகின் கண்காணிப்புப் பொறியாளர் பாஸ்கர் மற்றும் பெருநகர அலகின் கோட்டப் பொறியாளர்கள், சென்னை மாநகராட்சி அலுவலர்கள், வருவாய்த் துறை அதிகாரிகள், மின்சார வாரியப் பொறியாளர்கள் மற்றும் சென்னை குடிநீர் வாரிய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உலக மீனவர் தினவிழா பொதுக்கூட்டம் நடந்தது. பொதுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். விழாவில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ், மீனவர் அணி மாநில செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பிஷப் நசரேன் சூசை, பாதர் டன்ஸ்டன், நிக்சன், மற்றும் மகேஷ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இறுதியில் பால்வளத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பனுக்கு வீர வாள் பரிசாக வழங்கப்பட்டது.

# மீனவர் நலனில் எப்போதும் உறுதியாக இருப்பவர் முதல்வர்!

## நாகர்கோவில் உலக மீனவர் தின விழாவில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பேச்சு!

கன்னியாகுமரி, நவ. 24 -

மீனவர் நலனில் எப்போதும் உறுதியாக இருப்பவர் முதல்வர் தான் அதனை செயல்படுத்தியும் காட்டியுள்ளார் என கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடந்த உலக மீனவர் தின விழாவில் அமைச்சர் ராஜ கண்ணப்பன் தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உலக மீனவர் தினவிழா பொதுக் கூட்டம் நடந்தது. பொதுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பால் வளத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை ஆகியோர்சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டனர்.



விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேசுகையில், மீனவ மக்களுக்காக ராம நாதபுரத்தில் வரலாற்று சிறப்புமிக்க மீனவர் மாநாடு நடத்தியவர் முதல்வர் அவர்கள். சென்னையில் வெள்ளம் வந்த போது ஒரே நாளில் வெள்ளத்தை அகற்றி மின்சாரம் வழங்கியவர் நமது தளபதியின் ஆட்சி என்பதை நினைவில் கொள்ளுங்கள். மீன்பிடி தடைக்கால நிவாரண நிதியை 5 ஆயிரத்தில் இருந்து 8 ஆயிரமாக உயர்த்தி தந்தவர் முதல்வர் தான். மீனவர் நலனில் எப்போதும் உறுதியாக இருப்பவர் முதல்வர் தான் அதனை செயல்படுத்தியும் காட்டியுள்ளார். ஜாதி மதமின்றி இயங்கும் ஒரு இயக்கமாக திகழும் திராவிட முன்னேற்ற கழகம் தான் தமிழகத்தை ஆள வேண்டும் என்று நிர்ப்பந்தம் உள்ளது. முதல்வர் சிறப்பான திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார். மீனவர் மீது அக்கறை உள்ளவர்கள் என இந்தியாவில் வேண்டுமானால் காங்கிரஸ் கட்சி என கூறலாம். ஆனால் தமிழகத்தில் திமுக தான் என்பதனை நீங்கள் உணர வேண்டும் மத்திய அரசோடு இணக்கமாக இருக்க வேண்டும் ஆனால் 1 ரூபாய்க்கு 29 பைசா தரும் மத்திய அரசு நமக்கு வேண்டாம் என்றார்.

விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை பேசுகையில், பா.ஜ.க. கடல் தாமரை மாநாடு நடத்தி மோடி ஆட்சிக்கு வந்தால், மீனவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது படகுகள் இலங்கை அரசு சிறை பிடிக்கப்படாது. அதையும் மீறி பிடித்தாலே பாதுகாப்புக்கு இந்திய ராணுவம் வந்து நிற்கும் என்றார்கள். ஆனால் 10 ஆண்டுகளாக வாக்குறுதியை காட்டில் பறக்க விட்டு விட்டார்கள். மீனவர் தினம் கொண்டாடும் இந்நாளில் ஒரு பக்கம் கண்ணீரும் கம்பலையுமாக மீனவர்கள் உள்ளார்கள். மீனவர்கள் தான் பூர்வ குடிகள் மண்ணின் மக்கள். மீனவர்களை ஓரளவு தாங்கி பிடிப்பது தமிழகம் தான்.

ஆனால் இது போதாது அதிக பிரதிநிதித்துவம் வேண்டும். மீனவர்கள் விவகாரத்தில் வெளியுறவு கொள்கை தோல்வி அடைந்துள்ளது. தொடர்ந்து தமிழக மீனவர்கள் இலங்கையால் சிறை பிடிக்கப்பட்டு வருகிறது என்றார்.

விழாவில் மாவட்டச் செயலாளர் மேயர் மகேஷ், மீனவர் அணி மாநில செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பிஷப் நசரேன் சூசை, பாதர் டன்ஸ்டன், நிக்சன், மற்றும் மகேஷ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பனுக்கு வீர வாள் பரிசாக வழங்கப்பட்டது.

### மராட்டியத்தில் - பல்வேறு

# முறைகேடுகளுக்கிடையே பா.ஜ.க. முன்னிலை!

மும்பை, நவ. 24 -

மகாராஷ்டிரா மாநிலத்தில் நடந்து முடிந்த தேர்தலில் பல்வேறு முறைகேடுகளுக்கிடையே பா.ஜ.க. அணி நேற்று மதியம் 3 மணி நிலவரப்படி முன்னிலை வகித்திருந்தது.

மகாராஷ்டிராவில் மொத்தமுள்ள 288 சட்டப் பேரவை தொகுதிகளிலும் கடந்த 20ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

நேற்று காலை 8 மணி முதல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வந்த நிலையில், மதியம் 3 மணிக்கு வெளியான தகவல்களின் படி, பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி 217 இடங்களில் முன்னிலை பெற்றிருந்தது.

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 64 தொகுதிகளிலும், பிற கட்சிகள் 7 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன.

இதனால், மகாராஷ்டிராவில் பா.ஜ.க. கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கிறது.

### தமிழ்நாட்டில் நியாயவிலைக் கடைகளுக்குப் போதுமான அளவு

# துவரம் பருப்பு அனுப்பப்பட்டுள்ளது; தட்டுப்பாடு இல்லை!

## மருத்துவர் ராமதாசுக்கு – உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி விளக்கம்!

**சென்னை, நவ.23-**

**தமிழ்நாட்டில் நியாயவிலைக் கடைகளுக்குத் துவரம் பருப்பு போதுமான அளவு அனுப்பப்பட்டுள்ளது. தட்டுப்பாடு இல்லை. மருத்துவர் இராமதாஸ் அவர்களுக்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பதிலறிக்கை வருமாறு :**

தமிழ்நாடு அரசு சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் வாயிலாக 2.25 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம்தோறும் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ. 30க்கும் ஒரு லிட்டர் பாமாயில் ரூ. 25க்கும் மானிய விலையில் வழங்கி வருகிறது.



துவரம் பருப்பு விநியோகம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் பாட்டாளி மக்கள் நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் அவர்கள் சென்னை மாநகரில் உள்ள பெரும்பான்மையான நியாய விலைக் கடைகளில் நவம்பர் மாதத்திற்கான துவரம் பருப்பு இதுவரை வழங்கப் படவில்லை என்றும் சென்னையில் மட்டுமின்றி சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் நியாய விலைக் கடைகளில் பருப்பு விநியோகிக்கப்படவில்லை என்றும் துவரம் பருப்பு விநியோகம் பற்றி முழுதும் அறியாமல் கூறியிருக்கிறார்.

நவம்பர்2024 மாதத்தில் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களுக்கும் 2,03,84,122 கிலோ துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு நாளது தேதி வரை 1,62,83,486 கிலோ வழங்கப்பட்டு, நவம்பர் மாத ஆரம்ப இருப்பையும் (27,53,606 கிலோ) சேர்த்து 92% நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் 68,44,719 கிலோ துவரம் பருப்பு இருப்பு உள்ளது. அதுமட்டுமின்றி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் 66,91,000 கிலோ துவரம் பருப்பு கையிருப்பு உள்ளது.

சென்னை மண்டலங்களைப் பொருத்தமட்டில் மொத்தமுள்ள 1794 கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 20,55,811 கிலோ துவரம் பருப்பில் 14,75,019 கிலோ வழங்கப்பட்டு நவம்பர் மாத ஆரம்ப இருப்பையும் (2,68,122 கிலோ) சேர்த்து 87% துவரம் பருப்பு நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னையைச் சுற்றியுள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் அவற்றிற்கான ஒதுக்கீட்டில் முறையே 96%, 94% மற்றும் 97% துவரம் பருப்பு நியாய விலைக் கடைகளுக்குப் பொதுமக்களுக்கு விநியோகித்திட அனுப்பப்பட்டுள்ளது. மேலும், ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச்2025 மாதம் வரை துவரம் பருப்பு மற்றும் பாமாயில் விநியோகம் சீராக நடைபெறுவதற்காக அந்த மூன்று மாதங்களின் தேவையான 6 கோடி கிலோ துவரம் பருப்பு மற்றும் 6 கோடி லிட்டர் பாமாயிலுக்கும் இன்று (22.11.2024) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஆதலால், துவரம் பருப்பு விநியோகத்தில் எந்தவிதத் தட்டுப்பாடும் இல்லை. எதிர்காலத்திலும் தட்டுப்பாடுகள் ஏற்படாத வண்ணம் சீரிய முறையில் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இனிமேலாவது மருத்துவர் இராமதாஸ் அவர்கள் சரியாக விவரங்களைத் தெரிந்துகொண்டு அறிக்கை வெளியிட்டால் நல்லது என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



வேலூர் மாநகரதி.மு.க அலுவலகத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கதிரேசன், மா.ப.அன்புநிதி, பகுதி செயலாளர் வீ.ஜி.கே.சுந்தர விஜி, மாமன்ற உறுப்பினர் எஸ்.முருகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.ஏ. பாலாஜி, மண்டல குழு தலைவர் வெங்கடேசன், மாநகர தொண்டர் அணி அமைப்பாளர் ரவி, மாநகர சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் அப்துல் மஜீத், மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் சீனிவாச காந்தி, மாநகர மீனவர் அணி அமைப்பாளர் உமா சந்திரன், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் அந்தோணி, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருண் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில்

# முரசொலி மாறன் 21வது நினைவு நாள்!

நீலகிரி, நவ. 24 -

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி, முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 21வது நினைவுநாளை முன்னிட்டு, நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் தொரை, சதக்கத்துல்லா, உதகை நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக கழக நிர்வாகிகள் அனைவரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா, காந்தல் ரவி, எல்கில் ரவி, செல்வராஜ், ரஹமத்துல்லா, உதகை நகர துணை செயலாளர் ரீட்டா, மாவட்டப் பிரதிநிதி கார்த்திக், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் நாகராஜ், உதகை நகரமன்ற உறுப்பினர்கள் ரமேஷ், விஷ்னு, கஜேந்திரன், ரகுபதி, கழக நிர்வாகிகள் குண்டன், வெங்கடேஷ், ஜோகி, சிவகுமார் மற்றும் செயல்வீரர்கள் திரளாக கலந்துக்கொண்டனர்.



அரசின் சார்பில், உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 104–வது பிறந்த நாளையொட்டி, சென்னை அசோக் நகரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ. கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, க.கணபதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன், (மக்கள் தொடர்பு) ச.செல்வராஜ், (செய்தி) மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.